RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
# MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-54 | 27 பிப்ரவரி | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## அமெரிக்காவில் குடியேறுபவர்களுக்கு 'தங்க அட்டை' விலை $5 மில்லியன் ட்ரம்ப் அறிவிப்பு

நியூயார்க், பிப்.27



அமெரிக்காவில் குடியேறுபவர்களுக்காக 'கோல்டு கார்ட்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்த இருப்பதாகவும், 5 மில்லியன் டாலர்களை கொடுத்து அதனை பெற்றுக் கொள்ளலாம் என்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக டொனால்டு ட்ரம்ப் பதவியேற்ற பிறகு அமெரிக்காவில் சட்ட விரோதமாக குடியேறியவர்கள் அவரவர் நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள் என அறிவித்தார். அதன்படி அங்கு சட்டவிரோதமாக குடியேறியவர்களை நாடு கடத்தும் நடவடிக்கையை அமெரிக்க அரசு மேற்கொண்டுள்ளது. இந்தியா, மெக்சிகோ, கொலம்பியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு பலகட்டங்களாக சட்ட விரோதமாக குடியேறியவர்கள் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த சூழலில், அமெரிக்காவில் குடியேறியவர்களுக்காக 'கோல்டு கார்ட்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்த இருப்பதாகவும், 5 மில்லியன் டாலர்களை கொடுத்து அதனை பெற்றுக் கொள்ளலாம் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது: "நாங்கள் தங்க அட்டை ஒன்றை விற்பனை செய்ய இருக்கிறோம். க்ரீன் கார்டு போல இது கோல்டு கார்டு. இந்த அட்டைக்கு நாங்கள் 5 மில்லியன் டாலர்கள் என விலை நிர்ணயம் செய்துள்ளோம். இதில் க்ரீன் கார்டில் இருக்கும் அனைத்து சலுகைகளும் கிடைக்கும்.

இது குடியுரிமைக்கான ஒரு வழியாகும். பணக்காரர்கள் எங்கள் நாட்டுக்கு இந்த கார்டை பெற்று வரலாம். அவர்கள் இங்கே வசதியுடனும், வெற்றிகரமாகவும் இருப்பார்கள். அவர்கள் நிறைய பணம் செலவு செய்வார்கள், நிறைய வரி செலுத்துவார்கள். நிறைய பேரை வேலைக்கு அமர்த்துவார்கள்" இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்தார்.

மேலும் இந்த திட்டம் இரண்டு வாரங்களில் நடைமுறைக்கு வரும் என்றும், இதற்கு காங்கிரஸின் ஒப்புதலை பெறவேண்டிய அவசியம் தனது நிர்வாகத்துக்கு இல்லை என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஆனால் இந்த திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படும் என்பது குறித்த தெளிவான தகவல்கள் எதையும் அவர் வெளியிடவில்லை.

அமெரிக்காவில் குடியேறும் முதலீட்டாளர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுத்து கிரீன் கார்டுகளைப் பெற அனுமதிக்கும் தற்போதைய ணிங்5 என்ற திட்டத்துக்கு இது மாற்றாக இருக்கும் என்று அமெரிக்க வர்த்தகத் துறை செயலாளர் ஹோவர்ட் லுட்னிக் தெரிவித்துள்ளார்.

## "தவெக பண்ணையார்களுக்கான கட்சி இல்லை" விஜய் திட்டவட்டம்

சென்னை, பிப்.27



தவெக பண்ணையார்களுக்கான கட்சி இல்லை. அந்த காலத்தில் பண்ணையார்கள் தான் பதவியில் இருப்பார்கள். ஆனால் இப்போது பதவியில் இருப்பவர்கள் பண்ணையார்களாக மாறி விடுகிறார்கள் என்று தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

மாமல்லபுரத்தில் நடைபெறும் தவெக இரண்டாம் ஆண்டு தொடக்க விழாவில் அக்கட்சியின் தலைவர் விஜய் பேசியதாவது: "1967, 1977 தேர்தல்களை போல ஒரு மிகப்பெரிய மாற்றத்தை நாங்கள் 2026 தேர்தலில் உருவாக்குவோம். இந்த அரசியலை பொறுத்தவரை யார், யாரை எதிர்ப்பார்கள் என்று கணிக்கவே முடியாது. இங்கு நிரந்தர நண்பனும் இல்லை. எதிரியும் இல்லை. அரசியலுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். அது ஜனநாயக உரிமை என்று சொல்வார்கள்.

ஆனால் மக்களுக்கு ரொம்ப ரொம்ப பிடித்துப்போன ஒருவன் அரசியலுக்கு வருகிறான் என்றால், அதை நல்லவர்கள் எல்லாம் வரவேற்பார்கள். ஒரு சிலருக்கு மட்டும் கொஞ்சம் எரிச்சல் வரத்தானே செய்யும். இதுவரை நாம் சொன்ன பொய்யை நம்பி மக்கள் நமக்கு ஓட்டு போட்டார்களே, ஆனால் இவன் சொல்வது மக்கள் மனதுக்கு நெருக்கமாக உள்ளதே, இவனை எப்படி க்ளோஸ் செய்யலாம் என்று நினைக்கின்றனர்.

அதில் என்ன பேசுவதென்று தெரியாமல், வர்றவன் போறவன் எல்லாம் கட்சி ஆரம்பிக்கிறான் என்று சொல்கிறார்கள். ஆட்சியில் இருப்பவர்கள் நமக்கு எதிராக பேசுவதைப் போல. இப்படிப்பட்ட ஒரு அரசியல் களத்தில் கொஞ்சம் கூட பயம் இல்லாமல், வரும் எதிர்ப்புகளை இடது கையால் தள்ளிவிட்டு நம்முடைய தவெக இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

நம்முடைய மாவட்ட நிர்வாகிகள் எல்லாருமே இளைஞர்களாக இருக்கிறார்கள் என்று சொல்கின்றனர். அண்ணா, எம்ஜிஆர் கட்சி தொடங்கியபோது அதில் இருந்தவர்கள் இளைஞர்கள் தான். அதுதான் வரலாறு. கட்சி நிர்வாகிகள் எல்லாருமே சாதாரண குடும்பத்தில் இருந்து வந்தவர்கள் என்று சொல்கிறார்கள். சாதாரண குடும்பத்தில் இருந்து வந்தவர்கள்தான் பெரிதாக சாதித்திருக்கிறார்கள். நம் கட்சி பண்ணையார்களுக்கான கட்சி இல்லை. அந்த காலத்தில் பண்ணையார்கள் தான் பதவியில் இருப்பார்கள். ஆனால் இப்போது பதவியில் இருப்பவர்கள் பண்ணையார்களாக மாறி விடுகிறார்கள்.

மக்களின் நலனை பற்றியோ, நாட்டின் நலனை பற்றியோ கவலையில்லாமல் வெறும் பணம் பணம் மட்டும்தான். இப்படிப்பட்ட எண்ணம் கொண்ட பண்ணையார்களை அரசியலை விட்டு அகற்றுவதுதான் நம்முடைய முதல் வேலை." இவ்வாறு விஜய் தெரிவித்தார்.

## அமித் ஷா வருகைக்கு எதிர்ப்பு கோவையில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்




கோவை, பிப்.27

தமிழகத்துக்கு கல்வி, பேரிடர் நிதி தர மறுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கோவை வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் கோவை வருகையை கண்டித்து காந்திபார்க் பகுதியில் நேற்று கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சியின் தமிழக தலைவர் செல்வப்பெருந்தகை தலைமை வகித்தார்.

வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் வி.எம்.சி.மனோகரன் முன்னிலை வகித்தார். மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் கருப்புசாமி, தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் பகவதி மற்றும் காங்கிரஸ் கட்சியின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அதேபோல, அமித்ஷா வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து தபெதிக, இ.கம்யூ, திராவிடர் கழகம், திராவிடர் தமிழர் கட்சி உள்ளிட்டவை சார்பில் பீளமேடு பி.எஸ்.ஜி டெக் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், பீளமேடு ஹோப்காலேஜ் சந்திப்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீஸார் கைது செய்தனர்.

## மாறும் வானிலை! இலங்கைக்கான கப்பல் போக்குவரத்து 3 நாட்களுக்கு ரத்து

நாகை, பிப்.27



இலங்கை இடையே இயங்கும் 'சிவகங்கை' கப்பல்

சென்னை: வங்கக் கடலில் நிலவும் மோசமான வானிலை மற்றும் பலத்த காற்று காரணமாக பிப். 26 முதல் 28 வரை நாகை இலங்கை பயணிகள் இடையேயான கப்பல் போக்குவரத்து மூன்று நாட்களுக்கு ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் நாகை துறைமுகத்திலிருந்து இலங்கை காங்கேசன்துறை துறைமுகம் வரை இந்தியா இலங்கை இடையே கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ம் தேதி 'செரியாபாணி' என்ற பெயரில் பயணிகள் கப்பல் இயக்கப்பட்டது. ஆனால், வடகிழக்கு பருவமழை மற்றும் பல காரணங்களால் அதே மாதம் 23ம் தேதி முதல் அந்த கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

அதன்பின்னர் சுபம் என்ற கப்பல் நிறுவனம் மீண்டும் நாகையிலிருந்து காங்கேசன் துறைக்கு 'சிவகங்கை' என்ற பெயரில் கப்பல் இயக்க முடிவு செய்து கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ம் தேதி முதல் புதிய பயணிகள் கப்பல் சேவையை தொடங்கியது.

வாரத்தில் ஐந்து நாட்களுக்கு கப்பல் இயக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்த நிலையில் பாதுகாப்பு காரணமாக கடந்த சில மாதங்களுக்கு முன் தற்காலிமாக சேவை நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் இந்தாண்டுக்கான கப்பல் போக்குவரத்து இம்மாதம் 22 ம் தேதி தொடங்கியது. தினமும் காலை 7.30 க்கு நாகையில் கிளம்பி 11.30 க்கு காங்கேசன் துறைமுகத்தை அடையும் கப்பல், அங்கிருந்து மறு மார்க்கத்தில் மதியம் 2.30 மணிக்கு புறப்பட்டு மாலை 6.30 க்கு நாகையை வந்தடைந்தது. இதனை பயணிகள் அதிக அளவில் பயன்படுத்தி வந்தனர். இந்த நிலையில் தமிழ்நாட்டில் நேற்று முதல் 28 ம் தேதி வரை பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

அதன்படியே நேற்று முன்தினம் தொடங்கி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக வங்கக்கடலில் பலத்த காற்று வீசி வருகிறது. இதன் காரணமாக கப்பலை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் 26 ம் தேதி முதல் 28 ம் தேதி வரை கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்படுவதாகவும், மார்ச் 1 ம் தேதி முதல் கப்பல் போக்குவரத்து வழக்கம்போல் நடைபெறும் என்றும் கப்பலை இயக்கும் சுபம் நிறுவனம் அறிவித்துள்ளது. நாகை இலங்கை இடையே நீண்ட நாள் இடைவெளிக்குப் பிறகு கப்பல் போக்குவரத்து தொடங்கி நான்கு நாட்கள் நடைபெற்ற நிலையில் மீண்டும் 3 நாட்களுக்கு தடைப்பட்டுள்ளது சுற்றுலாப் பயணிகள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## "எப்போதும் வாக்காளர் நலனுக்காக தேர்தல் ஆணையம் செயல்படும்" மதுரையில் தலைமை தேர்தல் ஆணையர் பேட்டி

மதுரை, பிப்.27



எப்போதும் வாக்காளர்கள் நலனுக்காக தேர்தல் ஆணையம் செயல்படும் என, இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தெரிவித்தார்.

இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் இன்று காலை மதுரை வந்தார். மதுரை அரசு சுற்றுலா மாளிகையில் அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தினார். இதன்பின் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மதுரையில் தேர்தல் பணி தொடர்பாக அதிகாரிகளுடன ஆய்வு நடத்தினேன்.

18 வயது பூர்த்தியான அனைவரும் ஓட்டளிக்க வேண்டும். அதுதொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மதுரையில் தேர்தல் பணிகளை அதிகாரிகள் சிறப்பாக செய்கின்றனர். இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் நலனுக்காக செயல்படும்.'' என்றார்.

ஆய்வுக் கூட்டத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், மதுரை கலெக்டர் சங்கீதா, மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன், மாநகர காவல் ஆணையர் லோகநாதன், மாவட்ட எஸ்பி அரவிந்த் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தனது மனைவியுடன் மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து அவர் ராமேஸ்வரத்துக்கு புறப்பட்டுச் சென்றார்.

## அரசு உதவி மருத்துவர் பணியிடத்துக்கான தகுதி பட்டியலில் 400 மருத்துவர்கள் நீக்கப்பட்டதை எதிர்த்து வழக்கு

சென்னை, பிப்.27



தமிழகம் முழுவதும் புதிதாக நியமிக்கப்படவுள்ள 2,642 அரசு உதவி மருத்துவர்களுக்கான தகுதி பட்டியலில் இருந்து 400 மருத்துவர்களை நீக்கியதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், பணி நியமனம் வழக்கின் இறுதி தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் காலியாக உள்ள 2,642 அரசு உதவி மருத்துவர் பணியிடங்களை நிரப்ப மருத்துவ தேர்வு வாரியம் கடந்த ஜன.5 அன்று தேர்வு நடத்தியது.

அதன்படி தேர்வு முடிந்து தகுதியான மருத்துவர்களின் தகுதிப் பட்டியலை தேர்வு வாரியம் வெளியிட்டது. அதன் பிறகு இதில் 400 பேர் கடந்த 2024ஜூலை 15க்கு முன்பாக மருத்துவக் கவுன்சிலில் பதிவு செய்யவில்லை எனக்கூறி தகுதிப்பட்டியலில் இருந்து அவர்களின் பெயர்களை தேர்வு வாரியம் நீக்கியது. இதை எதிர்த்து பாதிக்கப்பட்ட மருத்துவர்கள் பிரியதர்ஷினி, சாய் கணேஷ் உள்ளிட்ட பலர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

அதில், ''கடந்த 2024ம் ஆண்டு ஜூலை 15ம் தேதிக்கு முன்பாக தமிழ்நாடு மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்ய விண்ணப்பித்திருந்தோம். மருத்துவ பல்கலைக்கழகம், சான்றிதழ்கள் வழங்க காலதாமதம் செய்ததால் உரிய நேரத்துக்குள் நிரந்தரப் பதிவு சான்றிதழைப் பெற முடியவில்லை. இதற்கு பல்கலைக்கழகம் தான் காரணம் என்பதால், எங்களுக்கான பணியிடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும்'' எனக் கோரியிருந்தனர். இந்த வழக்கு நீதிபதி சி.வி.கார்த்திகேயன் முன்பாக விசாரணைக்கு வந்தது.

அப்போது, மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எம்.வேல்முருகன், சான்றிதழ் சரிபார்ப்புக்கு தமிழ்நாடு மருத்துவக் கவுன்சில் பதிவு செய்திருந்தால் போதுமானது எனக் கூறப்பட்டிருந்தது. ஆனால் தற்போது நிரந்தர பதிவு இல்லை எனக் கூறி இவர்களை நீக்கிவிட்டதாக வாதிட்டார்.

அதையடுத்து நீதிபதி, தமிழ்நாடு மருத்துவ தேர்வு வாரியம் புதிதாக நியமிக்கவுள்ள அரசு உதவி மருத்துவர்களுக்கு வழங்கும் பணி நியமன உத்தரவு இந்த வழக்கின் இறுதி தீர்ப்புக்கு கட்டுப்பட்டது எனக்கூறி, இதுதொடர்பாக மருத்துவ தேர்வு வாரியம் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை இன்று (பிப்.26) நடைபெறுகிறது.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வருவாய்த்துறை அலுவலர்களுக்கான மாதாந்திர பணி ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், தலைமையில் நடைபெற்றது.

## சித்தாலப்பாக்கத்தில் ஜெயலலிதாவின் பிறந்தநாள் விழா





சித்தாலப்பாக்கம் பிப்27

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலைதெற்கு ஒன்றியம், சித்தாலப்பாக்கம் ஊராட்சியில் தமிழக முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதாவின் 77 வது பிறந்தநாள் விழாவை எதிர்க்கட்சித் தலைவர், எடப்பாடி கே. பழனிச்சாமி, சென்னை புறநகர் மாவட்ட செயலாளர் ,கே. பி. கந்தன், அம்மா பேரவை துணைச் செயலாளர், பரங்கிமலை கிழக்கு ஒன்றிய செயலாளருமான பெரும்பாக்கம் எ. ராஜசேகர் அவர்களின் வாழ்த்துக்களுடன், சென்னை புறநகர் மாவட்ட வர்த்தக அணி இணைச் செயலாளர், எம். ஜான் முருகேசன் மற்றும் 2 வது வார்டு உறுப்பினர், சாந்தி ஜான் முருகேசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து அ.தி.மு.க கழகக் கொடியை ஏற்றி முன்னாள் முதல்வர், ஜெ. ஜெயலலிதா அவர்களின் திருஉருவபடத்திற்கு மாலை அணிவித்து , மலர் தூவி, வணங்கி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் விழாவை கொண்டாடினர். இந்நிகழ்வில் வள்ளுவர் கிளைக் கழகச் செயலாளர் ஜே. எம். ஜான்சன் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

## பெருங்களத்தூர் பகுதி சார்பில் கல்வெட்டு திறப்பு விழா கொடியேற்றி அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி



பெருங்களத்தூர் பிப் 27

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பகுதி சார்பில் பெருங்களத்தூரில்

புரட்சித்தலைவி ஜெய. ஜெயலலிதாவின் 77வது பிறந்த நாளை முன்னிட்டு கழகப் பொதுச் செயலாளர் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தமிழர் எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க மாவட்ட இணை செயலாளர் தகவல் தொழில்நுட்ப பிரிவு டி.பிரசாந்த், 58வது வட்ட துணைச் செயலாளர் டி.மதன்குமார், அவர்கள் ஏற்பாட்டில் கல்வெட்டு திறப்பு விழா, கொடியேற்றி அன்னதானம் நிகழ்ச்சி நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் கலந்துகொண்டு கட்சி கொடி ஏற்றி வைத்து திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து கல்வெட்டு திறந்து வைத்து அன்னதானம் வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சி முன்னாள் அமைச்சர் அனைத்துலக எம்ஜிஆர் மன்ற தலைவர் டி.கே.எம் சின்னையா, பெருங்களத்தூர் பகுதி கழகச் செயலாளர் ஜெ.சீனு பாபு ,ஸ்ரீகாந்த், சீனிவாசன், நாராயணன், முருகன், பஜ்ஜி முருகன், சச்சின், குட்டி, வடிவேலுன், அஜித் குமார், பரந்தாமன், சரவணன், மோகன்தாஸ், நடராஜன், ராஜாராம், விநாயகம், ரகுபதி, வெங்கடேசன், மோகன், பாஸ்கர், குமார் உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்..



முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 77வது பிறந்தநாள் முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூர் பகுதி 56வது வட்டக் கழக செயலாளர் பிரேம்குமார் அவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இதில் சிறப்பு அழைப்பாளர்களாராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் கலந்துகொண்டு திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து அதனை தொடர்ந்து சுமார் 200 நபர்களுக்கு புடவை மற்றும் அறுசுவை உணவு சிக்கன் பிரியாணி வழங்கினார்கள் உடன் முன்னாள் அமைச்சர் அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற தலைவர் டி.கே.எம்.சின்னையா, பெருங்களத்தூர் பகுதி கழகச் செயலாளர் சீனு பாபு, பொருளாளர் பீட்டர் நாகராஜ், கிருஷ்ணமூர்த்தி, நித்தியானந்தன், சசிகுமார் உள்ளிட்ட பெருங்களத்தூர் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..

# சிவகங்கை புத்தகத் திருவிழாவில் கோளரங்கத்தை ஏழாயிரத்திற்கும் அதிகமானோர் பார்வையிட்டனர்




சிவகங்கை பிப்27

சிவகங்கை நான்காவது புத்தகத் திருவிழாவில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் ஒருங்கிணைப்பில் கோளரங்கம் அமைக்கப்பெற்று அரங்கம் நிறைந்து பார்வையிட்டு வருகின்றனர். கோளரங்கம் அரங்கினை பிப்ரவரி 21 அன்று மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் தொடங்கி வைத்தார். சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி முன்னிலை வைத்தனர். காலை 10 மணி முதல் இரவு பத்து மணி வரை பெருந்திரள் வாசிப்பு பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் கலைக்குழுவினரின் நிகழ்ச்சிகள் பட்டிமன்றம் சொற்பொழிவு கவிதை அரங்கம் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆறாவது நாளான இன்று வரை 7000க்கு அதிகமான மாணவ மாணவிகள் கல்லூரி மாணவ மாணவிகள் பொதுமக்கள் என ஆர்வத்தோடு கோள்களின் இயக்கம் செயற்கைக்கோள் செயல்படும் விதம் பூமியில் உள்ள உயிரினங்கள் அழிந்து எவ்வாறு புதிய உயிரினங்கள் தோன்றியிருக்கின்றன என்பது குறித்த முப்பரிமான வீடியோக்களை மாணவ மாணவிகள் கண்டு வியந்தனர். கோளரங்கள் குறித்த அறிவியல் விளக்கங்களை தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி சிறப்பாக செய்து வருகிறார். அறிவியல் இயக்க பொறுப்பாளர்கள் பிரபு மணவாளன் அனந்தகிருஷ்ணன் ராஜசரவணன் அசோக் பாரதி கணேசன் பாண்டி தாமஸ் ஆரோக்கியமேரி வானவில் மன்ற கருத்தாளர்கள் மேற்பார்வையிடுகின்றனர். ஆறாவது நாளான இன்று வரை 7000 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் வானியல் குறித்த கோளரங்கத்தை உற்சாகத்தோடு அரங்கம் நிறைந்து பார்த்து வருகின்றனர்..

# செங்கல்பட்டு மாவட்டம்சித்தாலப்பாக்கத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழா





சித்தாலப்பாக்கம் பிப் 27

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலைதெற்கு ஒன்றியம், சித்தாலப்பாக்கம் ஊராட்சியில் தமிழக முன்னாள் முதல்வர், ஜெ. ஜெயலலிதா அவர்களின் 77 வது பிறந்தநாள் விழாவை எதிர்க்கட்சித் தலைவர், எடப்பாடி கே. பழனிச்சாமி, சென்னை புறநகர் மாவட்ட செயலாளர் ,கே. பி. கந்தன், அம்மா பேரவை துணைச் செயலாளர், பரங்கிமலை கிழக்கு ஒன்றிய செயலாளருமான பெரும்பாக்கம் எ. ராஜசேகர் வாழ்த்துக்களுடன், பரங்கிமலை கிழக்கு ஒன்றிய மாணவரணி செயலாளர், டி .என்.எச் .பி, எஸ். சதீஷ் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சங்கர், மாவட்ட இணை செயலாளர், எம்.ஜி.ஆர்.இளைஞர் அணி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர், பி. தாமோதரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அருள், முன்னாள் அம்மா பேரவை துணைச் செயலாளர், வார்டு உறுப்பினருமான மூர்த்தி, மாவட்ட வர்த்தக அணி இணைச் செயலாளர் எம். ஜான்முருகேசன் , கிளைக் கழக அவைத் தலைவர் ஜானகிராமன், மாவட்ட பிரதிநிதி மகேந்திரன், ஒன்றிய விவசாய அணி வாசுதேவன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலரும், வார்டு உறுப்பினருமான பூங்குழலி ராஜேந்திரன், சுந்தர், சதீஷ், கிளைக் கழகச் செயலாளர்கள் ஜான்சன், நந்தன், சரண்ராஜ், உன்னிகிருஷ்ணன் , பழனிவேல் ,சக்திவேல், ஆனந்தன் ,உதயராஜ், மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர் ஜவகர், பிரதாப், ஒன்றிய துணைச் செயலாளர் ஹரிதாஸ் ,சிவா, குப்புசாமி செட்டியார், முருகேசன், புவனேஷ், பால்டேனியல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அ.தி.மு.க கழகக் கொடியை ஏற்றி முன்னாள் முதல்வர், ஜெ. ஜெயலலிதா அவர்களின் திருஉருவபடத்திற்கு மாலை அணிவித்து , மலர் தூவி, வணங்கி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய பின்னர், சிக்கன் பிரியாணி அறுஞ் சுவை உணவு 500க்கும் மேற்பட்டோருக்கு பரிமாறி பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடினர். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்டம் ராஜ கம்பீரத்தில் மாற்றுத்திறன் மாணவர்களுக்கான மருத்துவ முகாம்



மானாமதுரை பிப்27

சிவகங்கை மாவட்டம் மானா மதுரை வட்டம் ராஜ கம்பீரத்தில் பள்ளிக்கல்வித்துறை மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இணைந்து நடத்திய மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ முகாம் புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளியில் நேற்று காலை 10 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெற்றது.

இம்மருத்துவ முகாமில் கண் மருத்துவர், காது மூக்கு தொண்டை மருத்துவர், மனநல மருத்துவர், குழந்தைகள் நல மருத்துவர், முட நீக்கியல் மருத்துவர், கண் பரிசோதகர், காது பரிசோதகர் ஆகியோர் கலந்துகொண்டு மாற்றுத்திறன் மாணவர்களை பரிசோதித்து மாற்றுத்திறன் மாணவர்களுக்கான அடையாள அட்டையை பரிந்துரைத்தனர்.

மருத்துவர் பரிந்துரையை ஏற்று, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் பாலகிருஷ்ணன் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு அடையாள அட்டை, யூ டி ஐ டி அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இம் மருத்துவ முகாமில் மாற்றுதிறன் மாணவர்கள் 50 பேர் தங்கள் பெற்றோருடன் கலந்துகொண்டனர். இவர்களில் புதிய அடையாள அட்டை பேரும், பழைய ஆட்டையை புதுப்பித்தலில் 10 பேரும், புதிய பேருந்து பயணச்சலுகை பெற்றவர்கள் 10பேரும், இரயில் பயணச் சலுகை பெற்றவர்கள் 17 பேரும் பயனடைந்தனர்.

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட உதவி திட்ட அலுவலர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், பள்ளி தலைமை ஆசிரியர், வட்டார கல்வி அலுவலர்கள் வட்டார வள மைய மேற்பார்வையாளர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலக பணியாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், சிறப்பு பயிற்றுநர்கள், இயன்முறை மருத்துவர்கள், ஷிவிசி கணக்காளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

மாற்றுத்திறன் மாணவர்களுக்கு மானாமதுரை வைரம் அரிமா சங்கத்தினர் மதிய உணவு வழங்கினர். மானாமதுரை வட்டார வள மைய மேற்பார்வையாளர் இராமையா, வட்டார ஒருங்கிணைப்பாளர் அனிதா, சிறப்பு பயிற்றுநர்கள் ஜான்சி, ஜூலியட், விக்டர் இயன்முறை மருத்துவர் நாகராஜன் ஆகியோர் முகாமிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# குன்னூர் தேயிலை ஏல மையங்களில் ரூ.20.08 கோடி வருமானம் கிடைத்துள்ளது



குன்னூர், பிப்.27

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான தேயிலை தூள்கள் குன்னூரில் உள்ள ஏல மையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டுக்கான எட்டாவது ஏலத்திற்கு 13.12 லட்சம் கிலோ இலை ரகமும், 3.69 லட்சம் கிலோ டஸ்ட் ரகம் என மொத்தம் 16.81 லட்சம் கிலோ தேயிலை தூள் ஏலத்திற்கு வந்தது. இதில் 11.77 லட்சம் கிலோ இலை ரகம், 3.55 லட்சம் கிலோ டஸ்ட் ரகம் என மொத்தம் 15 புள்ளி 32 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனையானது. இந்த ஏலத்தில் தேயிலை தூள் சராசரியாக கிலோ ஒன்று இருக்கு ரூ.119.94 விலை கிடைத்தது. இது கடந்த வார்த்து விட ரூபாய் இரண்டு விலை குறைவு ஆகும். இந்த ஏலத்தில் மொத்த வருமானம் 16. இந்த இடத்தில் மொத்த வருமானம் 18.83 கோடி ரூபாய் கிடைத்துள்ளது. இதேபோல் நீலகிரி கூட்டுறவு தொழிற்சாலைகள் உற்பத்தி தேயிலை தூள்கள் டீ சர்வ் ஏல மையத்தில் 1.08 லட்சம் கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு வந்தது. இதில் 1.04 லட்சம் கிலோ விற்பனையானது. சராசரி விலையாக கிலோ ஒன்றுக்கு ரூபாய் 119.90 பைசா கிடைத்தது. இதன் மூலம் மொத்த வருமானம் ரூ.1.25 கோடி என இரண்டு ஏல மையங்களையும் சேர்த்து மொத்தம் 20.08 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது...



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் 58வது வார்டு நேரு நெடுஞ் சாலையில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடத்தை மறு சீரமைப்புக்கு 9.5லட்சம் செலவில் நேற்று பூமி பூஜை 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் கலந்து கொண்டு பூமி பூஜை நடைபெற்றது உடன் மாமன்ற உறுப்பினர் மதுமிதா மோகன், பி.புகழேந்தி, வட்ட செயலாளர் ஐசக் வட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# காரைக்குடி அருகே லாரியில் கடத்திச்சென்ற 5.20 டன் ரேஷன் அரிசி பறிமுதல் 2 பேர் கைது

காரைக்குடி பிப்27

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே கொத்தேரி சந்திப்பு பகுதியில் சிவகங்கை குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப்பிரிவு போலீஸார் வாகனச் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்பொழுது சந்தேகத்திற்குரிய வகையில் வைக்கோல் ஏற்றி வந்த இடைமறித்து சோதனை யிட்டனர். அதில், 130 நெகிழி மூடைகளில் 5,200 கிலோ ரேஷன் அரிசி வைத்திருந்தது தெரிய வந்தது. இதையடுத்து ரேஷன் அரிசியும், லாரியும் பறிமுதல் செய்யப்பட்டது.

இது தொடர்பாக மேற்கொண்ட விசாரணையில், வாணியங்குடி, சாமியார்பட்டி, கண்டனி மற்றும் மானாமதுரை சுற்றுவட்டாரப் பகுதியில் இருந்து ரேஷன் அரிசியைச் சேகரித்து, கள்ளச்சந்தையில் விற்பனை செய்ய கொண்டு சென்றது தெரிய வந்தது.



இதையடுத்து, குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவு உதவி ஆய் வாளர் தேபாகர், வாகனத்தில் இருந்த காரைக்குடி கோட்டை யூரைச் சேர்ந்த ஓட்டுனர் எம்.பழனிவேல்(42), சிவ கங்கையைச் சேர்ந்த எம்.கரு ணாநிதி(45) ஆகிய பேரையும் கைது விசாரணை செய்து வரு கிறார். மேலும் தப்பிச்சென்ற வியாபாரியைத் தேடி வருகிறார்.




மதுரை ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் மானாமதுரை சர்வீஸ் சாலையில் உள்ள ஏடிஎம் கடந்த 20 நாட்களுக்கு மேலாக பூட்டி கிடப்பதால் பணம் எடுக்க வரும் வாடிக்கையாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். பூட்டப்பட்ட ஏடிஎம்மை மீண்டும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரும்படி அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்...



சிவகங்கை பேருந்து நிலைய விரிவாக்கப் பணிகளுக்கென கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் ,மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம் மற்றும் சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப சிதம்பரம் ஆகியோர்களின் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் 202425 மூலம் தலா ரூ.01.00 கோடி வீதம் மொத்தம் ரூ.02.00 கோடி மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் கீழ் அடிக்கல் நாட்டும் பணி யினை நேற்று துவக்கி வைக்கப்பட்டது. உடன் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத், சிவகங்கை நகர் மன்ற தலைவர் துரை ஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கை மாறன், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்

# தேனியில் ஒன்றிய அரசின் இந்தி திணிப்பை கண்டித்து திமுக மாணவரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

தேனி, பிப்.27

தேனி பங்களாமேடு பகுதியில் மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தியை திணித்து மீண்டும் மொழிப்போருக்கு நிர்ப்பந்தம் செய்யும் பாஜக ஒன்றிய அரசை கண்டித்து தேனி வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.பி.டி.ஸ்டீபன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முன்னதாக தேனி பழைய பேருந்து நிலையம் முதல் பங்களாமேடு வரை கண்டன கோஷங்களுடன் பேரணியாக ஊர்வலம் நடந்தது.




இந்நிகழ்வில் தேனி பாராளுமன்ற உறுப்பினரும், தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளருமான தங்க. தமிழ்செல்வன், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு மத்திய அரசை கண்டித்து கண்டன உரையாற்றினர்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி முற்போக்கு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் சேகுவாரா, அனைத்து இந்திய மாணவர் பெருமன்றம் வரதன், இந்திய மாணவர் சங்கம் வேல் பிரகாஷ், திராவிடர் மாணவர் கழகம் மாநில துணைச் செயலாளர் ஜீவா, சமூக நீதி மாணவர் இயக்கம் மண்டல செயலாளர் சதாம், முஸ்லிம் மாணவர் கூட்டமைப்பு முகமது சபீர், அன்சார் அஹமது, ஜாபர் சாதிக், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்டச் செயலாளர் சர்புதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் தேனி அல்லிநகரம் நகராட்சி தலைவர் ரேணுபிரியா பாலமுருகன், பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் பாண்டியன், தேனி ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி, போடி ஒன்றிய செயலாளர் அய்யப்பன், பெரியகுளம் நகர செயலாளர் முகமது இலியாஸ், தேனி நகர செயலாளர் நாராயணபாண்டியன் மற்றும் திமுக நிர்வாகிகள் பொறுப்பாளர்கள், மாணவரணி நிர்வாகிகள், விடுதலைச் சிறுத்தை நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், திரவியம் கல்லூரி மாணவிகள் என 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மேலும் ஆர்ப்பாட்டம் முடிவில் தேனி நகர மாணவரணி ஸ்ரீபன்ராஜ் நன்றியுரை ஆற்றினார்.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் வாகன சோதனை 2500 கிலோ ரேசன் அரிசி 2000 லிட்டர் மண்ணெண்ணெய் பறிமுதல்

கன்னியாகுமரி பிப்27

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் நடந்த வாகனச் சோதனைகளில் கேரளாவுக்கு கடத்தி செல்ல முயன்ற ரேசன் அரிசி மற்றும் மண்ணெண்ணெய் பறிமுதல் செய்யப்பட்டது.

இது குறித்த விபரம் வருமாறு.

தனி வட்டாட்சியர் அனிதா குமாரி தலைமையில் தனி வருவாய் ஆய்வாளருடன் இணைந்து விளவங்கோடு வட்டம் அருமனை குஞ்சாலு விளை பகுதியில் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்த போது அந்த வழியாக சந்தேகத்திற்கிடமான வகையில் வந்த சுமோ வாகனத்தை வழிமறித்து சோதனை செய்தபோது இருக்கைகளை மாற்றி ரகசிய அறைகள் அமைத்து நூதன முறையில் 1500 கிலோ ரேசன் அரிசி பதுக்கி வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் வாகனத்தை ஒட்டி வந்த ஓட்டுனர் வாகனதை நிறுத்தி விட்டு தப்பி ஓடிவிட்டார்.



இது போல் நேற்று நள்ளிரவு தனி வட்டாட்சியர் பறக்கும் படை (பொ) அனிதாகுமாரி தலைமையில் . துணை வட்டாட்சியர் பறக்கும் படை (பொ) சுனில்குமார், தனி வருவாய் ஆய்வாளர் மற்றும் ஓட்டுனர் சுரேஷ் ஆகியோர் வில்லுக்குறி பகுதியில் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்த போது அந்த வழியாக வேகமாக வந்த கேரள பதிவு எண் கொண்ட சொகுசு கார் ஒன்றினை சந்தேகத்தின் பேரில் நிறுத்த முற்பட்ட போது நிறுத்தாமல் சென்றுள்ளது. அந்த வாகனத்தை பின்னால் தூரத்தி சென்று தக்கலை அரசு மருத்துவமனை அருகே வைத்து வழிமறித்த போது காரை நிறுத்தி விட்டு ஓட்டுனர் தப்பி ஓடிவிட்டார். பின்னர் வாகனத்தை சோதனை செய்த போது வாகனத்தின் பின்பக்கம் சுமார் 1000 கிலோ ரேசன் அரிசி கண்டெடுக்கப்பட்டது.

அதுபோல் நேற்று அதிகாலை மணவாளக்குறிச்சி பகுதியில் வாகனச் சோதனையில் ஈடுப்பட்டிருந்த போது அந்த வழியாக வேகமாக வந்த கேரள பதிவு எண் கொண்ட பிக்கப் வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ய முற்பட்ட போது அந்த வாகனத்தை ஓட்டுனர் நிறுத்திவிட்டு தப்பிஓடி விட்டார். பின்னர் வாகனத்தை சோதனை செய்த போது. 50 கேன்களில் சுமார் 2000 லிட்டர் மீனவர்களின் படகுகளுக்கு பயன்படுத்தப்படும் மானிய விலை வெள்ளை நிற மண்ணெண்ணெய் தார்பாய் போட்டு மறைத்து வைக்கப்படிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி மூன்று சம்பவங்களில் கண்டுபிடிக்க பட்ட ரேசன் அரிசி மற்றும் மண்ணெண்ணை ஆகியவற்றை பறிமுதல் செய்த அதிகாரிகள் அவற்றை காப்பு காடு அரசு உணவு கிட்டங்கி மற்றும் மண்ணெண்ணெய் குடோனில் ஒப்படைக்கப்பட்டது. வாகனங்களை மேல் நடவடிக்கைக்காக விளவங்கோடு வட்ட வழங்கல் அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கடத்தியவர்கள் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். கடத்தல் வாகனத்தை கண்டுபிடித்த தனி வட்டாட்சியர் அனிதா குமாரி. துணை வட்டாட்சியர் பறக்கும் படை சுனில் குமார். அவர்களை பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் பாராட்டினார்கள்.

# பெரியகுளத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சி சார்பில் வக்பு உரிமை மீட்பு மாநாடு

பெரியகுளம் பிப்.27

தேனி மாவட்டம் பெரியகுளம் பழைய பேருந்து நிலையத்தில் தேனி மாவட்ட எஸ்.டி.பி.ஐ. (சோசியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆஃப் இந்தியா) கட்சி சார்பில் வக்பு உரிமை மீட்பு மாநாடு மாவட்ட தலைவர் அபுபக்கர் சித்திக் தலைமையில் நடந்தது. மாவட்ட பொதுச்செயலாளர் சாதிக் அலி வரவேற்று பேசினார். தேசிய பொதுச்செயலாளர் தெஹ்லான் பாகவி, தமிழ் மாநில பொதுச் செயலாளர் அகமது நவவி, தேனி மாவட்ட தலைவர் முகமது ஹனீப், மாநில செயற்குழு உறுப்பினர் பாயிஜா ஷபீக்கா ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பேசினர். வக்பு திருத்த சட்ட மசோதா தொடர்பான நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் கடும்




எதிர்ப்புக்கு மத்தியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, வழிபாட்டு தலங்கள் 2,3 மற்றும் 4 பிரிவுகளை ரத்து செய்ய கோரியும், தேனி மாவட்டத்தில் உள்ள ஊர்களில் பள்ளிவாசல்கள், வக்பு வாரிய சொத்துக்கள் மற்றும் தர்கா சொத்துக்களின் ஆக்கிரமிப்பு அகற்றம், தேனி மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்களை உடனடியாக நியமிக்க கோரி, விவசாயிகளின் நலனுக்காக வைகை அணை மற்றும் மஞ்சளாறு அணைகளை தூர்வாருவது போன்ற தீர்மானங்களை கட்சி நிர்வாகிகள் வாசித்தனர். இந்நிகழ்வில் ஜமாத்துல் உலமா சபை, பாஜில் தேவ் பந்த் அமைப்புகள், எஸ்.டி.பி.ஐ மாவட்ட, ஒன்றிய நகர நிர்வாகிகள் உள்பட பலர் கொண்டனர். இந்நிகழ்ச்சியின் முடிவில் மாவட்ட செயலாளர் ஜாவித் அகமது நன்றி கூறினார்.

# தேனி வருசநாடு அருகே சோலை த்தேவன்பட்டி கிராமத்தில் 350 ஆண்டுகள் பழமையான நடுகல் கண்டுபிடிப்பு

வருசநாடு, பிப்.27

தேனி மாவட்டம் வருசநாடு அருகே உள்ள சோலை த்தேவன்பட்டி கிராமத்தில் உள்ள மயானம் அருகே பழங்கால நடுகல் ஒன்றை கடமலைக்குண்டு அரசு மேல்நிலைப்பள்ளி தமிழ் ஆசிரியர் செல்வம் கண்டுபிடித்துள்ளார்

இதுகுறித்து அவர் கூறியதாவது,

செயற்கரிய செயல் என்பது போரில் வீரமரணம்



அடைவதே என்று கருதிய பண்டைய தமிழர்கள் போரில் மடிந்தவர்களுக்கு நடுகல் எழுப்பினர் பின்னர் அந்த நடு கல்லை வழிபட்டனர் அதன் அடிப்படையில் சோலைத்தேவன் பட்டியில் வாழ்ந்து பின்னர் வீர மரணம் அடைந்த வீரன் சொர்க்கம் செல்லும்போது மனைவியின் கையினை பற்றிய படி உடன் செல்லும் நிலையினை உணர்த்தும் விதமாக இந்த நடுகல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நடுகல் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது இந்த நடுகல்லில் வீரன் ஒருவன் தன் மனைவியுடன் சுகாசன அமர்வில் அமர்ந்துள்ள காட்சியும் அருகில் மற்றொரு வீரன் வணங்கியபடி நின்ற கோலத்தில் இருக்கும் காட்சியும் புடைப்பு சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது வீரனின் வலது கை வாலை பிடித்த வாறும் இடது கையை மடக்கி உயர்த்தி மங்கள பொருளை பிடித்த வாரும் உள்ளது இடது புறம் கூந்தலை அள்ளி முடிந்து கட்டிய குண்டலம் என்னும் கொண்டையும், வீரனின் காதுகளில் அணிந்துள்ள காதணி ஆனது தோல் வரை தொங்கும் கொலை காதணியாகவும் இருக்கிறது.

கழுத்தில் சரப்பளி அரும்பு சரம் போன்ற கழுத்த ணிகளும் கையில் இரண்டு அடுக்குடைய வாவுளையும் மணிக்கட்டு அருகில் சூடகம் போன்ற அணிகலன்கள் வலப்புற குந்தளம் கொண்டை போன்றவை உள்ளது இடது புறத்தில் வீரனை ஒத்த அலங்காரங்களை உடைய இரு கைகளையும் கூப்பி வணங்கியபடி மற்றொரு ஆண் உருவம் நின்ற கோலத்தில் செதுக்கப்பட்டுள்ளது அவர் சண்டையில் வீரனோடு துணை நின்று இறந்தவராக இருக்கலாம் சிற்பங்களுக்கு மேல் புறத்தில் கிரீடம் போன்ற அமைப்பை கோட்டுறவுமாக கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது இந்த நடுகல்லில் உள்ள வீரன் இந்த பகுதியை ஆண்ட குறுநில தலைவராகவோ படைத்தளபதியாகவோ இருந்திருக்கலாம் என்று ஆசிரியர் செல்வம் கூறினார்

# பெரியகுளத்தில் அஇஅதிமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பிறந்தநாள் விழா



பெரியகுளம் பிப் 27

தேனி மாவட்டம் பெரியகுளம் வடகரை அண்ணா சிலை அருகில் பெரியகுளம் நகர அஇஅதிமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா 77 வது பிறந்த நாளை முன்னிட்டு அவருடைய உருவப்படத்திற்கு மாலை அணிவித்து பொது மக்களுக்கு பெரியகுளம் நகர செயலாளர் பழனியப்பன் தலைமையில் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.பின்பு பெரியகுளத்தில் உள்ள அனைத்து வார்டுகளிலும் கழக கொடிகளை ஏற்றி இனிப்புகளை வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் மாவட்டக் கழக இணைச் செயலாளர் முத்துலட்சுமி, மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் முகமது சலீம், மாவட்ட பிரதிநிதி விஜய் ஆனந்த், நகரத் துணைச் செயலாளர் வெங்கடேஷ்,நகர பொருளாளர் கமலக்கண்ணன், நகர எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் கணேசன், மற்றும் நகர சார்பு மணி நிர்வாகிகள்,மகளிர் அணிகள், வார்டு செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்,

# பழனியைச் சேர்ந்த பள்ளி மாணவன் சென்னையில் அறம் கட்டளையின் சார்பாக ஒளிரும் விருது

பழனி பிப் 27

திண்டுக்கல் மாவட்டம் பழனி தாலுகா கோதைமங்கலத்தை சார்ந்த ஸ்ரீ பரத் என்ற மாணவர் பழனி தேரடியில் உள்ள நகராட்சி கீழரதவீதி தொடக்கப்பள்ளியில் நான்காம் வகுப்பு படித்து வருகிறார். ஒன்றாம் வகுப்பு படிக்கும் போது இருந்தே பேச்சு, மாறுவேடம், நாபிறழ், சிறுதானிய ஓவியம், திருக்குறள், திருவருட்பா ஒப்புவித்தல், அறிவியல் பரிசோதனைகள் என்றும், விளையாட்டில் ஸ்கேட்டிங் மாவட்ட அளவிலும், சிலம்பம் தேசிய அளவிலும் என பல்வேறு துறைகளில் வெற்றி வாகை சூடிவருகிறார்.

தமிழ் சார்ந்த பல குழுமங்களிலும் பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளார். அக்டோபர் 2024 ல் ஜக்கி புக் ஆஃப் வோல்ட் ரெக்கார்ட்டில் தமிழ் மொழியில் உள்ள 247 எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உலக சாதனை புரிந்துள்ளார். இவர்



பெற்ற அத்தனை விருதுகள், சாதனைகளின் அடிப்படையில் சென்னை தேனாம்பேட்டையில் உள்ள நாரத கான சபாவில் அறம் செய்ய விரும்பு அறக் கட்டளை சார்பாக அறம் விருதான "ஒளிரும் மாணவர் விருது" திரைப்பட நடிகர், தயாரிப்பாளர் பாக்கியராஜ், மதுரை முத்து, நிதியின் குரல் நிறுவனர் பாஸ்கரன் ஆகியோர் வழங்கி சிறப்பித்தார்கள்.

# மானாமதுரையை சேர்ந்த கல்லூரி மாணவர் மாநில அளவிலான தடகள போட்டியில் 2ம் பரிசு பெற்று சாதனை



மானாமதுரை பிப்27

சிவகங்கை மாவட்டம் மானா மதுரையில் வசித்து வரும் மாயாண்டி என்பவரின் மகன் கல்லூரி மாணவர் முத்துக் கிருஷ்ணன் மாநில அளவில் சென்னையில் நடைபெற்ற 23 வயதிற்கு உட்பட்ட மும்முறை தாண்டுதல் தடகளப்போட்டியில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளி பதக்கம் பெற்று வெற்றி பெற்றுள்ளார் இவர் இதற்கு முன்னர் ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற ஜூனியர் மாநில தடகளப் போட்டியில் வெற்றி பெற்று தேசிய தடகள போட்டிக்கும் தேர்வானார் என்பதும் குறிப்பிடத் தக்கது இவர் சிவகங்கை அரசு துரைசிங்கம் கலைக் கல்லூரியில் பயின்று கொண்டே விளையாட்டில் ஆர்வம் காட்டி வருகிறார் இவருக்கு மாவட்ட விளையாட்டு அலுவலர் ரமேஷ் கண்ணன் மற்றும் தடகள பயிற்றுனர் ஆறுமுகம் ஆகியோர் பாராட்டுக்கள் தெரிவித்தனர்..

# திருப்பூர் சர்வ கட்சி மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம்!

திருப்பூர், பிப்.27

சர்வ கட்சி மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு, திருப்பூர் மாவட்டம் சார்பில் ரயில் நிலையம் அருகே உள்ள பி.எஸ்.என்.எல் அலுவலகம் முன்பு மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தியை திணிக்கும் மத்திய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நிகழ்ச்சி திமுக வடக்கு மாநகர மாணவரணி அமைப்பாளர் திலகராஜ் தலைமையில் நடைபெற்றது.இதில் மத்திய அரசை கண்டித்து பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டது, ஆர்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பெரும் திரளாக பங்கேற்றனர். அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் சார்பில் தோழர் முத்துக்குமார்,




திமுக வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கோபிநாத், இந்திய மாணவர் சங்கம் மாவட்ட செயலாளர் பிரவீன் குமார், மாநில செயற்குழு சாலினி, இளைஞர் காங்கிரஸ் மாநகர் மாவட்ட பொதுச்செயலாளர் சந்தீப், மதிமுக மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சங்கர் கணேஷ், முஸ்லிம் மாணவர் கூட்டமைப்பு மாநில துணைத்தலைவர் முகமது முஃபிஸ், விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் கலையழகன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி சார்பில் வெங்கடேஷ், அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மிதிலேஷ், எஸ்எஃப்ஐ மாவட்ட தலைவர் கல்கிராஜ், சமூக நீதி மாணவர் இயக்கம் மண்டல செயலாளர் ஆசிப், திராவிடர் கழகம் மாவட்ட மாணவரணி தலைவர் சூர்யா நன்றி உரையாற்றினார்.

# குன்னூரில் ஜெ .பிறந்தநாள் விழா 77 கிலோ கேக் வெட்டி கொண்டாட்டம்

குன்னூர், பிப்.27

நீலகிரி மாவட்டம் குன்னூரில் தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா 77 வது பிறந்த நாள் விழா கொண்டாட்டம் குன்னூர் நகர பகுதிகளில் மாவட்ட கழக செயலாளர் கப்பச்சி வினோத் தலைமையில் அவை தலைவர் மணி, அம்மா பேரவை மாவட்ட முன்னாள் எம்எல்ஏவுமான சாந்தி ராமு, மாநில இளைஞரணி இணை செயலாளர் நந்தக்குமார் முன்னிலையில் குன்னூர் நகர செயலாளர் சரவணக்குமார், குன்னூர் ஒன்றிய செயலாளர் ஹேம்சந்த் ஆகியோர் ஏற்பாட்டில் இனிப்புகள் வழங்கியும் 1000 பேருக்கு அன்னதானம் வழங்கியும் கொண்டாடப்பட்டது. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 77 வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடும் வகையில் 77 கிலோ கேக் வெட்டப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில்

மாநில .மாவட்ட, ஒன்றிய, நகர, நகரிய, சார் அணி நிர்வாகிகள், பேரூராட்சி கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள், குன்னூர் நகர மன்ற உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்கள் என ஏராமானோர் கலந்துக்





கொண்டனர். இதேபோல் அருகே உள்ள தூதூர்மட்டத்தில் மேலூர் ஒன்றிய அதிமுக சார்பில் ஒன்றிய செயலாளர் எஸ் எம் டி தங்கவேல் தலைமையில் நடைபெற்ற விழாவில் தூதூர்மட்டம் பஸ் நிலையத்தில் கட்சிக்கொடி ஏற்றப்பட்டு. அங்குள்ள அரசு நடுநிலை பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. விழாவில் கௌதம், கிருஷ்ணன், தைமலை மணி, சசி, ராஜா, தனபால் ,ஹரி,கோமளா, மயில்லம்மாள், இந்திராணி, சுஜித் உள்ளிட்ட கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# சிவகங்கை பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களின் அறிவியல் தின கொண்டாட்டம்







சிவகங்கை பிப்27

சிவகங்கையில் அரசு பார்வைத்திறன் குறையுடையோருக்கான தொடக்கப் பள்ளியில் ( VISION EMPOWER )பார்வை மேம்பாடு தொண்டு நிறுவனம் சார்பாக பார்வைத்திறன் குறையுடையோருக்கான மாபெரும் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. (VISIONEMPOWER )"விஷன் எம்பவர்" எனும் தொண்டு நிறுவனம் 2017 ம் ஆண்டு அக்டோபர் 4ம் தேதி தொடங்கப்பட்டது.

தற்போது 16 மாநிலங்களில் குறிப்பாக தமிழகத்தில் உள்ள 21 சிறப்பு பள்ளிகளில் உள்ள பார்வை குறைபாடுடைய மாணவர்களுக்கும், சிறப்பு ஆசிரியர்களுக்கும் இந்நிறுவனம் மூலம் அறிவியல் மற்றும் கணிதம் அணுகக்கூடிய வகையில் பயிற்சியளிக்கப்படுகிறது. பிப்ரவரி 28 உலக அறிவியல் தினத்தை முன்னிட்டு இந்நிறுவனத்தால் பள்ளியில் பிப்ரவரி 25,2025 அன்று அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டது. அறிவியல் மற்றும் கணித துறைகளில் வருங்காலங்களில் பார்வை குறைபாடுடைய மாணவர்களும் சிறந்த முறையில் சாதிக்க வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு இந்நிறுவனம் செயல்படுகிறது. சிவகங்கை பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியர் ச. வீரவேல் பாண்டியன் மற்றும் சிவகங்கை ஆசிரியர் பயிற்றுநர் ஆ. தனலட்சுமி, விஷன் எம்பவர் நிறுவனத்திலிருந்து கல்வி ஒருங்கிணைப்பாளர் பெ.க. யுவராஜ் இணைந்து அறிவியல் கண்காட்சியை தொடங்கி வைத்தனர். அறிவியல் சோதனைகள், கணிதம் தொடர்பான கணக்கீட்டு சிந்தனையை வளர்க்கும் விளையாட்டுகள், சுற்றுச்சூழலை காப்போம் எனும் தலைப்பில் பாடல், நடனம் என பார்வை குறைபாடுடைய மாணவர்கள் செய்தனர். பள்ளி மேலாண்மை குழு தலைவர் றி. முத்துலட்சுமி மற்றும் ஆசிரி யர் கள், பணியாளர்கள்,பெற்றோர்கள் சிலர் கலந்து கொண்டு அறிவியல் கண்காட்சியை கண்டு வியந்து பாராட்டினர். அதனை தொடர்ந்து "நெருப்பில்லா சமையலின்" கீழ் பல்வேறு விதமான உணவுப்பொருட்களை பார்வை குறைபாடுடைய மாணவர்கள் பிற மாணவர்களுக்கு செய்து காட்டி ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் பற்றி விளக்கிக்கூறினார்கள். இறுதியில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் விஷன் எம்பவர் சார்பாக பங்கேற்பாளர் பதக்கங்கள் வழங்கப்பட்டு அறிவியல் தின கொண்டாட்டம் இனிதே நிறைவுற்றது.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161